5

# மேன்மையான உடன்படிக்கை

## (7:11–8:13)

மேன்மையாது எது என்பதில் நாம் ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறோம், நம்மில் சிலர் மேன்மையான வேலைகளை, மேன்மையான வீடுகளை அல்லது மேன்மையான உடைகளை விரும்புகிறோம். மேன்மையான விஷயங்களை நாம் மதிப்பதால், எபிரெயர் 8ம் அதிகாரம் கூறும் கருத்தின் மீது நாம் ஆர்வமுள்ளவர்களாக இருக்க வேண்டும். (இந்த அதிகாரத்தை வாசிக்கவும்.) குறிப்பாக 8:6ஐக் கவனிக்கவும்:

> இவரோ விசேஷித்த வாக்குத்தத்தங்களின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார்.

இயேசு ''மிக உன்னதமான'' அல்லது ''மேன்மையான'' ஊழியத்தைக் கொண்டுள்ளார். அவரின் நிமித்தமாகவே நாம் ''மேன்மையான வாக்குத்தத்தங்களை'' நமக்கு அளிக்கிற ''மேன்மையான உடன்படிக்கை'' ஒன்றைக் கொண்டுள்ளோம்.

''மேன்மையானது'' என்பது எபிரெயர் 8ன் திறவுகோல் வார்த்தையாகவும், எபிரெயருக்கு எழுதிய நிருபம் முழுவதிலும் உள்ள முக்கியமான கருத்தாகவும் உள்ளது. மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் காட்டிலும் கிறிஸ்துவினுடைய வழி பற்றிய ஒவ்வொரு விஷயமும் மேன்மையானதாக உள்ளது. புதிய ஏற்பாடு ஒரு மேன்மையான உடன்படிக்கையை முன்வைக்கிறது என்பதே எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் செய்தியாக உள்ளது. அந்தக் கூற்று எதை அர்த்தப்படுத்துகிறது? மற்றும் நாம் வாழும் வழிக்கு அது அர்த்தப்படுத்துவது என்ன?

## மேன்மையான உடன்படிக்கையைக் கொண்டிருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது?

### இது எதை அர்த்தப்படுத்துவதில்லை

புதிய ஏற்பாடு ஒரு மேன்மையான உடன்படிக்கையாக உள்ளது என்று வேதாகமம் கூறும்போது அது அர்த்தப்படுத்துவது என்ன என்பதைப் புரிந்துகொள்வதற்கு, அது எதை அர்த்தப்படுத்துவது இல்லை என்பதை நாம் புரிந்துகொள்வது அவசியமாக உள்ளது.

*மோசமான பிரமாணம் அல்ல.* புதிய உடன்படிக்கை மேன்மையானதாக உள்ளது, ஆனால் அது, பழைய உடன்படிக்கை மோசமானதாக இருந்தது

என்று அர்த்தப்படுத்துவதில்லை. "மேன்மையானது" என்பது "நல்லது" என்ற பெயர் உரிச்சொல்லின் ஒப்பீட்டு வடிவமாக உள்ளது. புதிய உடன்படிக்கை மேன்மையானதாக உள்ளது என்று கூறுதலானது, பழைய உடன்படிக்கை நல்லதாக இருந்தது என்று மறைமுகமாக உணர்த்துகிறது. வேறொரு இடத்தில் பவுல், "... நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது" என்று கூறினார் (ரோமர் 7:12). பழைய பிரமாணம் ஒரு மோசமான பிரமாணமாக இருக்கவில்லை, அது ஒரு நல்ல பிரமாணமாக இருந்தது.

*தேவனால் கொடுக்கப்பட்டது.* புதிய உடன்படிக்கை மேன்மையானதாக உள்ளது என்பது, பழைய பிரமாணம் தேவனால் கொடுக்கப்படவில்லை என்று அர்த்தப்படுவது இல்லை (காண்க யாத்திராகம் 20). தேவனே பழைய உடன்படிக்கையை உண்டாக்கினவராக இருக்கிறார். அதுவும்கூட தெய்வீக வெளிப்படுத்துதலால் தான் கொடுக்கப்பட்டிருந்தது.

*சம காலத்திய மற்ற பிரமாணங்களைக் காட்டிலும் மேன்மையானது.* மீண்டுமாக, புதிய உடன்படிக்கை மேன்மையானதாக உள்ளது என்று கூறுதல், பழைய பிரமாணமானது அதன் நாட்களில் இருந்த மற்ற பிரமாணங்களைக் காட்டிலும் மேன்மையானதாக இருக்கவில்லை என்று அர்த்தப்படுத்துவது இல்லை. மற்ற பிரமாணங்களும் இருந்தன மற்றும் அவற்றில் சில மோசேயின் காலத்திற்கு முற்பட்டவைகளாக இருந்தன. அவைகள், பழைய உடன்படிக்கையில் காணப்பட்டவை போன்ற பிரமாணங்கள் சிலவற்றைக் கொண்டிருந்தன. இருப்பினும், மோசேயின் பிரமாணமானது அதன் சம காலத்திய வேறு எந்தப் பிரமாணச் சட்டத்தைக் காட்டிலும் மேன்மையானதாக இருந்தது.

*அதன் நோக்கத்தை நிறைவேற்றியது.* மேலும், புதிய உடன்படிக்கை மேன்மையானதாக உள்ளது என்ற உண்மையானது, பழைய உடன்படிக்கை தனது நோக்கத்தை நிறைவேற்றவில்லை என்று அர்த்தப்படுத்துவது இல்லை. மோசேயின் பிரமாணம் ஒரு நோக்கத்தைக் கொண்டிருந்தது - அது "நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது" என்று பவுல் கூறினார் (கலாத்தியர் 3:24) - மற்றும் அது நீக்கப்படுவதற்கு முன்னர் அந்த நோக்கத்தை அது நிறைவேற்றியது. பவுல், "விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே" என்று எழுதச் சென்றார் (கலாத்தியர் 3:25).

*ஒழுக்கரீதியான பிரமாணங்களைக் காட்டிலும் தாழ்ந்தது அல்ல.* இத்துடன் கூடுதலாக, புதிய உடன்படிக்கை மேன்மையானதாக உள்ளது என்று கூறுதல், பழைய உடன்படிக்கையின் ஒழுக்கரீதியான பிரமாணம் புதிய உடன்படிக்கையில் உள்ள ஒழுக்கரீதியான பிரமாணத்தைக் காட்டிலும் குறிப்பிட்ட வகையில் தாழ்ந்ததாக இருந்தது என்று அர்த்தப்படுத்துவது இல்லை. உண்மையில், பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகியவற்றில் காணப்படும் ஒழுக்கரீதியான கேட்டுக்கொள்ளுதல்களுக்கு இடையில் சிறிதளவே வேறுபாடு உள்ளது. இந்தக் கருத்தின்மீது புதிய ஏற்பாடு கூறுவது என்ன என்பதைச் சிலவேளைகளில் நாம் தவறாகப் புரிந்துகொள்கிறோம். எடுத்துக்காட்டாக, பழைய ஏற்பாடு முற்றிலுமாக புறம்பானவைகளைப் பற்றியே அக்கறை கொண்டதாக இருப்பதில்லை: எடுத்துக்காட்டாக, "... இச்சியாதிருப்பாயாக" (யாத்திராகமம்

20:17) என்ற கட்டளையைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்.[1] மத்தேயு 5ல் இயேசு தமது உரையைக் கேட்டவர்கள் (ஏற்கனவே) கேள்விப்பட்டிருந்ததற்கு நேரெதிராகக் கூறினார் என்பது உண்மையாகவே உள்ளது, ஆனால் அவர் மோசேயின் பிரமாணத்துடன் தமது போதனையை நேரெதிராக்கவில்லை. மாறாக அவர் தாம் போதித்ததை, ரபீக்கள் போதித்தவற்றுடன் மற்றும் மக்கள் நம்பியிருந்தவற்றுடன் தான் நேரெதிராக்கினார்.

**இது எதை அர்த்தப்படுத்துகிறது**

மேன்மையான உடன்படிக்கையைக் கொண்டிருத்தல் எதை அர்த்தப்படுத்துகிறது என்பதை மதித்து உணருவதற்கு, எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில், மேன்மையானவை என்று கூறப்படும், புதிய ஏற்பாட்டின் பண்புகள் எல்லாவற்றைப் பற்றியும் ஆழ்ந்து சிந்தியுங்கள்.

*மேன்மையான பிரதான ஆசாரியர்.* கிறிஸ்தவ யுகத்தில் நாம், ஒரு மேன்மையான பிரதான ஆசாரியரைக் கொண்டுள்ளோம். அந்த உண்மை எபிரெயர் 8ன் முதல் பாகத்தின் வலியுறுத்தமாக உள்ளது. இயேசு கிறிஸ்துவுக்குள், தேவனுடைய வலதுபாரிசத்தில் உள்ளவரும், "மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ் செய்கிறவருமாயிருக்கிற (அப்படிப்பட்ட) பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு" (8:1). இவர் பழைய உடன்படிக்கையின் ஆசாரியர்களில் இருந்து வேறுபட்டவராக இருக்கிறார் (8:1-5). இவரது ஆசாரியத்துவ ஊழியம், "மிகவும் உன்னதமான ஊழியமாக" உள்ளது (8:6), எனவே இவர் மேன்மையான பிரதான ஆசாரியராக இருக்கிறார் (மேலும் காண்க 7:7-12).

கிறிஸ்து ஒரு மேன்மையான பிரதான ஆசாரியராக இருப்பது ஏன்? ஏனென்றால் அவர் பரிசுத்தமும் மாசில்லாதவருமாக இருக்கிறார் (7:26, 27; மேலும் காண்க 4:15). அவர் எல்லாக் காலத்திற்கும் பலன்தரக்கூடிய ஒரு பலியைச் செலுத்தினார் (7:27). அவர் தெய்வீக ஆணையின் செயல்படுத்துதல் படியாக நமது பிரதான ஆசாரியர் ஆக்கப்பட்டார் (7:28), மற்றும் அவர் தமது ஆசாரியத்துவத்தை நிரந்தரமாகப் பற்றிக்கொண்டுள்ளார் (7:23-25).

*மேன்மையான உடன்படிக்கை.*[2] இன்றைய நாட்களில் நாம், ஒரு மேன்மையான உடன்படிக்கையின்கீழ் வாழ்கிறோம் (8:6; 7:22). பழைய உடன்படிக்கையைக் காட்டிலும் புதிய உடன்படிக்கை மேன்மையானது என்று எபிரெயருக்கு எழுதிய நிருபம் வலியுறுத்துகிறது. பழைய உடன்படிக்கை பிழையுள்ளதாக இருந்ததால் நாம் ஒரு புதிய உடன்படிக்கையைக் கொண்டிருத்தல் அவசியமாக இருந்தது என்று 8:7, 8ல் எழுத்தாளர் வாதிட்டார். அது எவ்வாறு பிழையுள்ளதாக இருந்தது? அதன் பிரமாணங்கள் பிழையுள்ளவைகளாக இருக்கவில்லை, ஆனால் அதன் பலிகளினால் பாவங்களை உண்மையாகவே எடுத்துப்போடக் கூடாதிருந்தது. ஆகையால் 8:8-12ல் எழுத்தாளர், புதிய உடன்படிக்கை வரவிருந்ததை முன்னறிவித்த எரேமியா 31:31-34ல் இருந்து மேற்கோள் தர காண்பித்தார். பிரமாணங்கள் கற்பலகைகளில் எழுதப்படுவதற்கு மாறாக, அவைகள் புதிய உடன்படிக்கையின்கீழ், இருதயங்களில் எழுதப்படும். இந்த உடன்படிக்கையின்கீழ் உள்ள மக்கள் தேவனை அறிந்துகொள்ள ஒருவர் பிறருக்குப் போதிக்க வேண்டுவதில்லை, ஏனெனில் இந்த உடன்படிக்கையின்கீழ் உள்ள ஒவ்வொருவரும் ஏற்கனவே அவரை அறிந்திருப்பார்கள். இருப்பினும், தேவன் "அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள்

பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பார்" (8:12) என்பதே இந்தப் புதிய உடன்படிக்கையின் கீழ் உள்ளவர்களுக்கு முதன்மை அனுகூலமாக இருக்கும்.

பழைய உடன்படிக்கைப் பலிகளினால் பாவங்களை நீக்கிப்போட இயலாதிருந்தது (10:4); புதிய உடன்படிக்கைப் பலியினால் அதைச் செய்ய முடிந்தது! அந்தப் பலிகள் பாவத்தை நீக்கிப்போட இயலாமையானது பழைய உடன்படிக்கையை "மரணத்துக்கேதுவான ஊழியம்" என்று ஆக்கிற்று (2 கொரிந்தியர் 3:7) மற்றும் அதன் "பெலவீனமுள்ளதும் பயனற்றதும்" (7:18, 19) என்று பேசுவதைச் சாத்தியம் ஆக்கிற்று. புதிய உடன்படிக்கையின் கீழ், கிறிஸ்துவின் பலியின் மூலமாக மன்னிக்கப்பட முடியும் என்ற காரணத்தினால் இது ஒரு மேன்மையான உடன்படிக்கையாக உள்ளது.

*மேன்மையான வாக்குத்தத்தங்கள்.* மேன்மையான வாக்குத்தத்தங்களின்மீது புதிய உடன்படிக்கை அஸ்திபாரப்படுத்தப்பட்டுள்ள காரணத்தினால், இது மேன்மையான உடன்படிக்கையாக உள்ளது (8:6). பழைய ஏற்பாட்டின் காலங்களில் வாழ்ந்தவர்கள் தேவனுடைய வாக்குத்தத்தங்களின் நிறைவான நிறைவேற்றத்தைக் காண்பதற்கு வாழவில்லை (11:13; 11:39, 40). வாக்குத்தத்தங்களை அவர்கள் மங்கலாகக் கண்டனர் ஆனால் அவற்றைப் பெற வழியெதையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை; இதற்கு மறுபுறத்தில் நாம், வாக்குத்தத்தங்களைத் தெளிவாகக் காணவும் அவற்றைப் பெற்றுக்கொள்ளவும் முடிகிறது. குறிப்பாக நாம் மகிழ்வுடன் அனுபவிக்கும் எந்த வாக்குத்தத்தங்கள் புதிய உடன்படிக்கையை மேன்மையானதாக ஆக்குகிறது? எபிரெயர் 8:12ன் படி, பழைய ஏற்பாட்டின்கீழ் இருந்தவர்களுக்குக் கிடைத்திராத மன்னிப்பின் உறுதிப்பாடு என்பது ஒரு விஷயம் ஆகும். இன்னொன்றும், கிறிஸ்துவின் மரணத்தின் நிமித்தம், நாம் ஒரு "நித்திய சுதந்தரம்" (9:15) பற்றிய வாக்குத்தத்தத்தைக் கொண்டிருக்கிறோம்.

*மேன்மையான பேச்சாளர்.* இந்த யுகத்தில் ஒரு மேன்மையான பேச்சாளர் இருக்கிறார். எபிரெயர் 1:1, 2 வசனப்பகுதி, பழைய ஏற்பாட்டின் காலங்களில் தேவனுக்காகப் பேசிய தீர்க்கதரிசிகளை, இன்றைய நாட்களில் தேவனுடைய பேச்சாளராக உள்ள கிறிஸ்துவுடன் நேரெதிராக ஒப்பிடுகிறது. மோசேயின் நியாயப்பிரமாணம் மத்தியஸ்தப்படுத்தப்பட்ட தூதர்களைக் காட்டிலும் (2:2); இவர் மேன்மையான பேச்சாளராக இருக்கிறார் (1:4); மற்றும் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தவரான மோசேயைக் காட்டிலும் (3:3-6) இவர் மேன்மையானவராக இருக்கிறார்.

*மேன்மையான நம்பிக்கை.* இந்த யுகத்தில் நாம் மேன்மையான நம்பிக்கையைக் கொண்டுள்ளோம் (7:19). நமது நம்பிக்கை மேன்மையானதாக இருப்பது ஏன்? ஒருவேளை இது "திரைக்குள் பிரவேசிக்கிறது" என்பதால் அவ்வாறு இருக்கலாம் (6:18-20). நமது நம்பிக்கை நமது பரலோக பலனுடன் தொடர்புடையதாக உள்ளது. பழைய உடன்படிக்கையின்கீழ் வாழ்ந்தவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை என்ன? அடிப்படையில் அவர்களின் நம்பிக்கை, பரலோக பலன் மீதல்ல, ஆனால் பூமிக்குரிய வாக்குத்தத்தங்களின் மீதே அடிப்படையாக இருந்தது. சிலவேளைகளில் அவர்கள், தேவனுடன் ஒரு நித்திய வாழ்வின் சாத்தியக்கூற்றைக் கண்டனர் (காண்க 11:16, 35), ஆனால் அதை மங்கலாகவே கண்டனர்; இதற்கு நேர்மாறாக நாம், பரலோகத்தின்

தெளிவான வாக்குத்தத்தங்களைக் கொண்டுள்ளோம். நாம் - பரலோகத்தில் வைக்கப்பட்டுள்ள பலனான - "மேன்மையான சுதந்தரத்தை" (10:34) முன்னெதிர் நோக்க முடிகிறது.

*மேன்மையான பலி.* ஒருவேளை, புதிய உடன்படிக்கையின் மேன்மையான பலியே அதை ஒரு மேன்மையான உடன்படிக்கையாக்கும் மிகவும் முக்கியமான கூறாக இருக்கலாம் (9:23). எபிரெயர் 9:13, 14 வசனப்பகுதி, மிருகங்களைப் பலிசெலுத்தியது என்பது மாம்சம் பரிசுத்தப்படுத்துதலை, வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால் சடங்காச்சாரமான சுத்திகரிப்பை நிறைவேற்றியது என்று கூறுகிறது. இருப்பினும் கிறிஸ்துவின் இரத்தமானது அதிகமானதை செய்தது; இது மனசாட்சியை சுத்தமாக்கி பாவங்களைக் கழுவுகிறது. கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கை பலியானது வல்லமை மிகுந்ததாக இருந்தது என்பதில் மேன்மையானதாக இருந்தது; இது பாவங்களை நீக்கிப்போட்டது (காண்க 9:13, 14; 10:4, 14), எனவே இது ஒரேதரமாகச் செலுத்தப்பட்டது (7:27; 9:25, 26; மேலும் காண்க 12:24).

*மேன்மையான பரிசுத்த ஸ்தலம்.* கிறிஸ்தவ யுகத்தில் "மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரம்" (8:2, 5; மேலும் காண்க 9:11, 24; 10:1) என்ற மேன்மையான பரிசுத்த ஸ்தலம் உள்ளது. பழைய பரிசுத்த ஸ்தலமான, கூடாரம் "உண்மையான கூடாரத்தின்" பிரதியாக அல்லது நிழலாக மாத்திரமே இருந்தது என்று வேதவசனங்கள் கருத்துத் தெரிவிக்கின்றன. தேவனுடைய மக்கள் இன்றைய நாட்களில் அவரைத் தொழுதுகொள்ளும் சபையே மேன்மையான பரிசுத்த ஸ்தலமாக உள்ளது.

## மேன்மையான உடன்படிக்கை நமது வாழ்விற்கு அர்த்தப்படுத்துவது என்ன?

*பழைய உடன்படிக்கை நீக்கிப்போடப்படுதல்.* நாம், புதிய மற்றும் மேன்மையான உடன்படிக்கையைக் கொண்டிருப்பதால், பழைய உடன்படிக்கை நீக்கிப்போடப் பட்டுள்ளது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், இரு உடன்படிக்கைகள் பற்றிய தமது ஒப்பீட்டை 8:13ல் பின்வரும் வார்த்தைகளுடன் முடித்தார்: "புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்துபோகக் காலம் சமீபித்திருக்கிறது." கிறிஸ்துவுக்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே, எரேமியா எழுதியபோதேகூட, பழைய உடன்படிக்கை நாள்பட்டதும் "உருவழிந்துபோகத் தயாரானதுமாக" இருந்தது. புதிய ஏற்பாட்டின் காலங்களில், அது நீக்கிப்போடப்பட வேண்டியதாக இருந்தது என்பதை ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள் புரிந்துகொண்டிருந்தனர் (உதாரணமாக எபிரெயர் 7:11, 12 ஐக் காணவும்). ஆகையால் நாம், பழைய ஏற்பாட்டை, அதன் கட்டளைகள் நமக்கு நேரடியாக நடைமுறைப்படுவதாகக் கண்ணோக்கக் கூடாது, அல்லது பழைய ஏற்பாட்டு காலங்களில் செய்யப்பட்ட மார்க்கரீதியான செயல்முறைகளைக் கொண்டு நமது மார்க்கரீதியான செயல் களை நியாயப்படுத்த முயற்சிக்கவும் கூடாது.

*உண்மைத்தன்மைக்கு ஊக்குவித்தல்.* நாம் மேன்மையான உடன்படிக்கையின்கீழ் வாழ்கிறோம் என்பதற்கு நாம் நன்றி நிறைந்தவர்களாக

*இருக்க வேண்டும். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், தமது வாசகர்களுக்கு, அவர்கள் புதிய உடன்படிக்கையின்கீழ் வாழ்வதால் மகிழ்வுடன் அனுபவிக்கும் ஆசீர்வாதங்களை அவர்களுக்கு நினைவூட்டுவதன் மூலம், அவர்கள் உண்மைத்தன்மையுடன் இருந்து, தங்கள் அறிக்கையைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்று அவர்களை ஊக்குவிக்க விருப்பநோக்கம் கொண்டிருந்தார். நாமும்கூட அந்த மேன்மையான உடன்படிக்கையின்கீழ் இருப்பதால், கர்த்தருக்கு உண்மையுள்ளர்களாக நிலைத்திருக்கும்படி ஊக்குவிக்கப்பட வேண்டும். ஒருவேளை நமது நன்றிநிறைந்த தன்மையானது, பழைய உடன்படிக்கையின்கீழ் கேட்டுக்கொள்ளப்பட்டவற்றைவிட அதிகமானவற்றைச் செய்யும்படி நம்மை வழிநடத்த வேண்டும்.*

*மாபெரும் தண்டனையின் சாத்தியக்கூறு. நமக்குக் கிடைத்துள்ள மாபெரும் ஆசீர்வாதங்கள் நம்மீது மாபெரும் பொறுப்புகளை வைக்கின்றன என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். நாம், புதிய உடன்படிக்கைக்குக் கீழ்ப்படியத் தவறினால், பழைய உடன்படிக்கையின்கீழ், கீழ்ப்படியாதவர்கள் பெற்றதைக் காட்டிலும் பெரிய தண்டனையைப் பெற்றுக்கொள்ளவும் நாம் பாத்திரர் ஆவோம் (10:26-29; 2:2, 3).*

## *முடிவுரை*

*மோசேயின் நியாயப்பிரமாணம், அதைக் கடைப்பிடித்தவர்கள் மாபெரும் ஒப்புக்கொடுத்தல் மற்றும் அர்ப்பணித்தலுடன் இருக்க வேண்டும் என்று ஏவிற்று; இஸ்ரவேல் மக்களில் பலர், உடன்படிக்கையின் தேவனை மறுதலிக்க மறுத்தபடியால் அல்லது அவர் இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுத்திருந்த நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமலிருக்க மறுத்தபடியால், மரித்துப் போயினர் (காண்க 11:32-38). தாழ்வான நியாயப்பிரமாணமே அவ்வகையான ஒப்புக்கொடுத்தலை ஏவமுடிந்தது என்றால், நாம் எதன்கீழ் வாழ்கிறோமோ, அந்தப் புதிய, மேன்மையான உடன்படிக்கை நமக்குள் எவ்வளவு பெரிய ஒப்புக்கொடுத்தலை ஏவ வேண்டும்!*

---

*குறிப்புகள்*

*[1]மேலும், ஒரு சகோதரரை வெறுத்தல் அல்லது அவருக்கு எதிராக விரோதத்தைக் கொண்டிருத்தல் என்பதைத் தடைசெய்த பிரமாணத்தைப் பற்றியும் ஆழ்ந்து சிந்தியுங்கள். (காண்க லேவியராகமம் 19:17, 18.) [2]பழைய ஏற்பாட்டைக் காட்டிலும் புதிய ஏற்பாடு உயர்வானது என்று கருத்துத் தெரிவிக்கும் நேர்மாறு ஒன்றிற்கு, எபிரெயர் 12:18-24ஐக் காணவும்.*